# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

## விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 23–ஆம் நாள் நவம்பர் மாதம் 09.11.2018ம் நாள் வெள்ளிக் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள அவசரக் கூட்டப் பொருள் விபரம்

<table>
<tr>
<td><u>பொருள் எண். 1</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 7வது மாநில உயர்மட்ட குழு நிதியின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.22866/P3/2018 நாள்.23.08.2018ன்படி ரூ.297.00 இலட்சம் மதிப்பீட்டில் புதுக்கோட்டை சாலை ந.அ.எண்.4ல் அமைந்துள் நகராட்சி கலவை உரக்கிடங்கில் சேகரிக்கப்பட்டுள்ள 45105 க.மீ. குப்பை குவியல்களை பயோ மைனிங் முறையில் தரம் பிரித்து நிலத்தினை மீட்கும் பணி (Reclamations of existing dump yard located at pudukkottai Road TS No.4 by removing the legacy waste of 45105 cu.m Through Bio Mining Process) மேற்கொள்ள அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணி மேற்கொள்ள 12.09.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. 28.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன, மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும் தொழிற்நுட்ப தகுதி பெறவில்லையாதலால், 26.10.2018 அன்று மூன்றாம் முறை ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழிற்நுட்ப உறையினை திறந்து கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் உரிய தகுதிகளை கொண்டுள்ளதனை அடுத்து 02.11.2018 அன்று விலை விபர உறையினை திறந்து ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டுள்ளவாறு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1)</td><td>திரு.டி.மெய்ஞானம், ஒப்பந்ததாரர்</td><td>9.55 % அதிகம்</td></tr>
<tr><td>2)</td><td>திரு.எஸ். ரமேஷ், ஒப்பந்ததாரர்</td><td>4.98 % அதிகம்</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.ரமேஷ், ஒப்பந்ததாரர் கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி (4.98 சதவீதம் அதிகம்) கொடுத்துள்ளார். மேற்படி கூடுதல் ஒப்பந்தப்புள்ளியினை மதிப்பீட்டு விலைக்குள் குறைத்து தர கோரியதில் மேற்படி தொகையினை</td>
<td><u>தீர்மான எண்:–</u> 153<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2,3,4 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

குறைத்து தர இயலாது என தெரிவித்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு திரு.எஸ்.ரமேஷ், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.98 சதவிகிதம் அதிகமாக உள்ளதனை ஏற்கலாம்.
3. மேற்படி பணி திட்டபணியாதலால் மறுஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதமாதம் ஏற்படும் ஆகையால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேலும் மேற்படி கூடுதல் சதவீதம் நகர்மன்ற வரம்பிற்கு உட்பட்டுள்ளதால் அதனை ஏற்கலாம்.
4. மேலும் மதிப்பீட்டை விட கூடுதலாகும் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2340/2018/இ1)

**பொருள் எண்–2**

அறந்தாங்கி நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், 7வது மாநில உயர்மட்ட குழு நிதி 2018–2019ன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்டுள்ள விபரப்படி நாளிதழ்களுக்கு உண்டான விளம்பர கட்டணத் தொகை கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | நாளிதழின் பெயர் | பில் எண் மற்றும் நாள் | விளம்பர செய்யப்பட்ட நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | Accord Advertising Agencies, Chennai | DIPR/AAA/0685/18-2019/ dt.16.10.2018 | 29.09.2018 | 1,15,343.00 |
| | | மொத்தம் | | 1,15,343.00 |

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.7043/2017/அ1)

**தீர்மான எண்:–** 154

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**ஓம்/–நை,மீரா அலி**
**தனி அலுவலர்**
**அறந்தாங்கி நகராட்சி**